DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

*******

IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,

**PALLAVARAM.**

| | |
|---|---|
| STC.No. | 218/2023 |
| Prosecution: | அ.சா. |

| | | |
|---|---|---|
| **Deposition of witness for Name** | ~ | **மணிவண்ணன்** |
| **Father Name** | ~ | காசி |
| **Village** | ~ | |
| **Taluk** | ~ | |
| **Caste** | ~ | |
| **Calling** | ~ | |
| **Religion** | ~ | |
| **Age** | ~ | |

Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 on the day **of Dt.22.08.2025.**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தாக்கல் செய்த புகார் மனுவில் எதிரி இடம் எந்தெந்த தேதியில் கடன் தொகையை திருப்பி செலுத்துமாறு சொன்னதாக குறிப்பிட்டு தெரிவிக்கப்படவில்லை என்றால் சரிதான். எதிரியிடம் பலமுறை கடன் தொகையை திருப்பி செலுத்த கோரியதாக குறிப்பிட்ட நிலையில்.குறிப்பிட்டு எந்த தேதியில் கேட்டதாக சொல்லப்படவில்லை என்றால் பல தேதிகளில் கேட்டதால் தேதிகள் குறிப்பிடவில்லை. எதிரி எஸ் எல் ஷிப்பிங் நிறுவனத்தில் பணிபுரியும் போது அவரது கணவரிடமிருந்து பிரிந்து வாழ்ந்து வந்தார் என்றால் சரிதான்.

எதிரி மேற்படி எஸ் எல் ஷிப்பிங் நிறுவனத்தில் இருந்து எப்போது பணியில் இருந்து விடுவிக்கப்பட்டார் என்றால் 2019 ஆம் ஆண்டு நான் அந்த நிறுவனத்திற்கு சென்று அவரைப் பற்றி கேட்டபோது அவர் பணியில் இல்லை என தெரிவித்தார்கள். எதிரி எனக்கு கையொப்பம் செய்து எவ்வித காசோலையும் கொடுக்கவில்லை என்றாலும் எஸ் எல் ஷிப்பிங் நிறுவனத்தில் பணிபுரியும் போது மேற்படி நிறுவனத்துடன் எனது நிறுவனம் பரிவர்த்தனை செய்து வந்தபோது எதிரிக்குத் தெரியாமல் வழக்கு காசோலையை எடுத்து நான் தவறாக பயன்படுத்தி இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

எதிரி எனக்கு வழக்கு காசோலையை நான் புகாரில் குறிப்பிட்டுள்ள தேதியில் சொல்லி உள்ளது போல் வங்கியில் செலுத்த சொல்லவில்லை என்றாலும் நானே தன்னிச்சையாக மனுவில் குறிப்பிட்ட தேதியில் தவறாக வழக்கு காசோலை வசூலுக்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு காசோலை எத்தனை முறை வங்கியில் வசூலுக்காக தாக்கல் செய்துள்ளார் என்றால் நான்கு முறை தாக்கல் செய்துள்ளேன். வழக்கு காசோலை வங்கியில் தாக்கல் செய்த பின்னிட்டு அக்காசோலை மதிப்பு மறுக்கப்பட்ட தொடர்பாக எதிரிக்கு தொலைபேசி மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டு பின்பு மீண்டும் காசோலை வசூலுக்காக வங்கியில் செலுத்தியதாக குறிப்பிட்ட நிலையில் எதிரிக்கு போன் மூலம் அழைப்பு செய்து தொடர்பாக ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளார் என்றால் இல்லை.

எதிரியுடன் நெருங்கி பழகியதால் அவருக்கு நான் தொகை கொடுத்தேன் என்றாலும் எதிரிக்கு கடனாக எவ்வித தொகையும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கு உண்மையாக நான் கடன் தொகை கொடுத்து இருந்தால் ஒவ்வொரு தொகைக்கும் தனித்தனியாக எதிரியிடமிருந்து ஆவணங்கள் எழுதி பெற்று இருப்பேன் என்றாலும் அவ்வாறு நான் கடன் தொகை பெறாத ஆவணம் ஏதும் பெறவில்லை என்றால் சரியல்ல. மொத்தமாக கடன் தொகைக்கு எதிரிடம் ஆவணம் எழுதி பெற்றுள்ளேன். எதிரியிடம் மொத்தமாக கடன் தொகை பெற்றதற்கு என்ன ஆவணம் எழுதி பெற்றுள்ளார் என்றால் கடன் பத்திரம் எழுதி பெற்றுள்ளேன். அந்த கடன் பத்திரத்தில் எதிரி தனது கைப்பட எழுதி வட்டியுடன் கடனை திருப்பி செலுத்தி விடுவதாக எதிரி ஒப்புக்கொண்டு எழுதி கொடுத்துள்ளார்.

எதிரி எஸ் எல் ஷிப்பிங் நிறுவனத்தில் வேலை பார்த்து வந்தபோது அவரது கையொப்பம் எனக்கு பரிட்சயம் ஏற்பட்டதால் அதை தவறாக பயன்படுத்தி வழக்கு ஆவணங்களை உற்பத்தி செய்து எதிரிக்கு எதிராக தவறாக வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி எஸ் எல் ஷிப்பிங் நிறுவனத்தில் வேலை பார்த்து வந்தபோது எதிரிக்கு நான் நிறைய செலவுகள் செய்துள்ளேன் என்றால் இல்லை. நான் எதிரிக்கு பல செலவுகள் செய்துள்ளேன் என்றாலும் அதன் பின்னிட்டு எதிரிக்கும் எனக்கும் பிரச்சனை ஏற்பட்டதால் அத்தொகைகளை திரும்ப பெறுவதற்காக தவறாக வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாம்பரம் காவல் உதவி ஆணையாளர் அலுவலகத்தில் நான் கொடுத்த புகார் மனு வழக்கு காசோலை மதிப்பு மறுக்கப்பட்ட பின்னிட்டு கொடுக்கப்பட்டதா அல்லது அதற்கு முன்பாக கொடுக்கப்பட்டதா என்றால் வழக்கு காசோலை மதிப்பு மறுக்கப்பட்ட பின்னிட்டு கொடுக்கப்பட்டது.

இவ் வழக்கு காசோலை தொடர்பாக வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்ட பின்னிட்டு உடனடியாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து விட்டதால் நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்புக்கு எதிரியால் உரிய காலத்தில் பதில் அளித்து அனுப்ப முடியாமல் போய்விட்டது என்றால் சரியல்ல. எதிரியுடன் நான் நெருக்கமாக புகைப்படம் எடுத்துக்கொண்டது தொடர்பாக அந்த புகைப்படம் எதிரியின் வசம் இருந்து வருவதால் அது தொடர்பாக நான் காவல் நிலையத்தில் மேற்படி புகார் கொடுத்தேன் என்றால் இல்லை. எதிரி என்னிடம் எவ்வித கடன் தொகை பெறவில்லை என்றாலும் அவ்வாறு கடன் தொகை பெற்று இருந்தால் அந்த அந்த கடன் தொகைக்கு ஏற்ப ஆவணம் எழுதிக் கொடுத்திருப்பார் என்றாலும் நான் எதிரியுடன் தவறான முறையில் நெருங்கி பழகி வந்ததால் அதன் பின்னிட்டு ஏற்பட்ட பிரச்சனையால் அதிலிருந்து விடுபடுவதற்காக தவறாக எதிரி மீது இவ் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் எதிரிக்கு தனிப்பட்ட முறையில் பல செலவுகள் செய்துள்ளேன் என்றாலும் எதிரிக்கும் எனக்கும் இடையே எவ்வித சட்டபூர்வ கடன் தொகை ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

S/d xxxx

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

S/d xxxx
District Munsif-cum
Judicial Magistrate,
Pallavaram.